# மனனச் செய்யுள்கள்

# ஆத்திசூடி

- அறம் செய விரும்பு
- ஆறுவது சினம்
- இயல்வது கரவேல்
- ஈவது விலக்கேல்
- உடையது விளம்பேல்
- ஊக்கமது கைவிடேல்

- எண் எழுத்து இகழேல்
- ஏற்பது இகழ்ச்சி
- ஐயம் இட்டு உண்
- ஒப்புரவு ஒழுகு
- ஓதுவது ஒழியேல்
- ஔவியம் பேசேல்

\- ஔவையார்

# கொன்றை வேந்தன்

- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
- ஆலயம் தொழுவது சாலவும் நன்று
- இல்லறம் அல்லது நல்லறம் அன்று
- ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
- உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
- ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

- எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
- ஏவா மக்கள் மூவா மருந்து
- ஐயம் புகினுஞ் செய்வன செய்
- ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு
- ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
- ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு

- ஔவையார்

# திருக்குறள்

- அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
  பகவன் முதற்றே உலகு.
- இனிய உளவாக இன்னாத கூறல்
  கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
- நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
  அன்றே மறப்பது நன்று.

- கற்க கசடறக் கற்பவை கற்றபின்
  நிற்க அதற்குத் தக.
- காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
  ஞாலத்தின் மாணப் பெரிது.

\- திருவள்ளுவர்

# வெற்றி வேற்கை (நறுந்தொகை)

- எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்
- கல்விக்கு அழகு கசடற மொழிதல்
- செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்
- வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்
- மன்னவர்க்கு அழகு செங்கோன் முறைமை

- அதிவீரராம பாண்டியர்

# பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா -நீ

ஓய்ந்திருக்க லாகாது பாப்பா

கூடி விளையாடு பாப்பா -ஒரு

குழந்தையை வையாதே பாப்பா

சின்னஞ் சிறுகுருவி போலே -நீ

திரிந்து பறந்துவா பாப்பா

வண்ணப் பறவைகளைக் கண்டு -நீ

மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

கொத்தித் திரியுமந்தக் கோழி -- அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய் -- அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

- பாரதியார்